# தி/தி/புனித மரியாள் கல்லூரி
## (தேசிய பாடசாலை)
### மூன்றாம் தவணைப் பரீட்சை– 2022
### தமிழ் மொழியும் இலக்கியமும்

**தரம் - 07** **நேரம் - $1\frac{1}{2}$ மணி**

**சுட்டெண் - ………………**

**பகுதி – I**

**(I) மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.**

1. 'கடல், சக்கரம், மோதிரம்' ஆகிய பல பொருள் குறிக்கும் ஒரு சொல்
   i. ஆறு ii. ஆழி iii. கணை iv. சாகரம்

2. ' எனது அக்கா அழகிய ரோஜாவைத் தலையில் சூடினாள்'. இங்கு இடம்பெறும் செயற்படுபொருள் அடைமொழி
   i. எனது ii. அழகிய iii. ரோஜா iv. சூடினாள்

3. "இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்" இங்கு **தவழ்ந்து தவழ்ந்து** என்பது
   i. இணைமொழி ii. அடுக்கிடுக்குத் தொடர் iii. இரட்டைமொழி iv. அடுக்குத் தொடர்

4. "சோலையைக் கண்ணுற்று மிகவும் களிப்படைந்தேன்". இங்கு **களிப்பு** என்பதன் ஒத்த சொல்
   i. கோபம் ii. மகிழ்ச்சி iii. புகழ்ச்சி iv. இகழ்ச்சி

5. "அவள் முகத்தில் களங்கமிருக்கவில்லை". இங்கு **களங்கம்** என்பது
   i. கறை ii. புன்னகை iii. அழகு iv. உறுதி

6. உயிர் நெடில் எழுத்துக்களின் எண்ணிக்கை
   i. 126 ii. 133 iii. 05 iv. 07

7. ஆஹா! என்ன அழகு - இத் தொடரில் இடம் பெற்றுள்ள நிறுத்தக் குறியீடு
   i. வினாக்குறி ii. வியப்புக்குறி iii. மேற்கோட்குறி iv. அடைப்புக்குறி

8. சிகாமணி தேவையற்ற விடயத்தில் மூக்கை நுழைத்து விட்டுப் பின்னர் வசமாக வாங்கிக் கட்டிக் கொள்வான். இதில் **மூக்கை நுழைத்தல்** என்னும் மரபுத்தொடர் குறிப்பது.
   i. பிறர் விடயத்தில் தலையிடுதல் ii. வஞ்சித்தல்
   iii. பிறருக்கு உதவுதல் ivஇரங்குதல்

9. 'வெண்ணிலாவே' என்னும் கவிதை எந்த நூலிலிருந்து எடுக்கப்பட்டது?
   i. மண்வாசம் ii. நிலா முற்றம் iii. முற்றத்து மல்லிகை iv. சந்திரகாசம்

10. இராமனுடன் சீதை சென்றாள். இதில் வந்துள்ள வேற்றுமை
    i. முதலாம் ii. இரண்டாம் iii. மூன்றாம் iv. நான்காம்

11. வாழையின் இளமைப் பெயர் கன்று என்பது போல பனையின் இளமைப் பெயர்
    i. குட்டி ii.வடலி iii. நாற்று iv. கன்று

12. **Webpage** என்பதன் கலைச்சொல்………………. ஆகும்.
    i. இணையம் ii. விசைப்பலகை iii. வலையமைப்பு iv. வலைப்பக்கம்

13. கடவுள் உண்டு என நம்புபவன்
    i. ஆத்திகன் ii. நாத்திகன் iii. ஞானி iv. துறவி

14. எனக்குப் பசிக்கிறது…………………… வீட்டுக்குப் போக மாட்டேன். இவ் வாக்கியத்தில் வரவேண்டிய இணைப்பிடைச் சொல்.
i. அதனால் ii. ஆகவே iii. எனினும் iv. அத்துடன்

15. ‘ கூப்பிய கைக்காந்தள்’ என்பது எவ்வகை அணி
i. உருவக அணி ii. உவமை அணி iii. தற்குறிப்பேற்றம் iv. உயர்வுநவிற்சி அணி

16. அவர்கள் வந்தார்கள் - இங்கு அவர்கள் என்பது
i. பன்மைப் பெயர் ii. தன்மைப் பெயர் iii. படர்க்கைப் பன்மை iv. முன்னிலைப் பன்மை

17. நாய் ஓடியவனைத் துரத்தியது. இதில் **ஓடியவனை** என்பது
i. மாற்றுப்பெயர் ii. தொகைப்பெயர் iii. கூட்டுப்பெயர் iv. வினையாலணையும் பெயர்

18. அத்தி பூத்தாற் போல என்ற உவமைத் தொடர் குறிப்பது.
i. தெட்டத் தெளிவு ii. மிக அரிது iii. வாழ்வுக்குப் பயனின்மை iv. உடன் மறைவு

19. பின்வருவனவற்றுள் கெடுதல் விகாரமாக அமைவது
i. காலைப் பொழுது ii. படவேலை iii. பொற்குடம் iv. மட்பானை

20. தமிழ்த்தட்டச்சின் தந்தை எனப் போற்றப்படுபவர்
i. ஆர். முத்தையா ii. கா. மாணிக்கவாசகர் iii. கழனியூரான் iv. சி. ஜெய்சங்கர்

(20x2=40 புள்ளிகள்)

## பகுதி – II

**(I)** பின்வரும் தலைப்புக்களில் ஒன்றினைத் தெரிவு செய்து **100** சொற்களில் கட்டுரை எழுதுக.

1. உடைந்த பென்சிலின் சுயசரிதை
2. மரம் வளர்ப்போம் பயன் பெறுவோம்
3. தொலைபேசியும் மாணவர் கல்வியும்
4. வாசிப்பினால் மனிதன் பூரணமடைகின்றான்

(25 புள்ளிகள்)

**(II)** நீர் சென்ற கல்விச் சுற்றுலா தொடர்பில் வெளிநாட்டிலுள்ள உமது தந்தைக்கு **75** சொற்களுக்குக் குறையாமல் கடிதமொன்றை எழுதுக.

(15 புள்ளிகள்)

**(III)** பின்வரும் சொற்களை வைத்துப் பொருள் விளங்க வாக்கியம் அமைக்குக.

1. கிலி 2. கிழி 3. பரவை 4. பறவை 5. பனி
6. பணி 7. அலை 8. அழை 9. தலை 10. தழை

(10 புள்ளிகள்)

**(IV)** பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. அந்தரே செய்த குறும்புகள் இரண்டு எழுதுக.
2. எலியின் யோசனையைக் குழப்பும் படி சத்தமிட்டவர்கள் யாவர்?
3. வெண்ணிலாவை மறைப்பது எது?
4. வேற்றுமை என்றால் என்ன?
5. ‘‘நானும் கட்டுச்சோறு கொண்டு வந்திருக்கின்றேன், நானும் வெகு தூரத்திலிருந்துதான் வருகின்றேன்’’. யாரால்? யாருக்கு? கூறப்பட்டது?

(10 புள்ளிகள்)